நாள் : திங்கள் (9.11.2020)

**<u>கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியினை வாசித்து, கோடிட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக.</u>**

திரு. மதியழகன் குடும்பத்தினர் ____________ திருநாளைக் கொண்டாடினர். அன்றைய தினம் சில உறவினர்கள் அவர்களின் ______________ வந்திருந்தனர்.

திருமதி கோமளம் இரவில் வீட்டைச் சுற்றிலும் அகல் __________________ ஏற்றி வைத்தார். அவர்களின் வீடு பிரகாசமாக இருந்தது. உறவினர்களுக்கு இரவு உணவு _________________ இலையில் பரிமாறப்பட்டது. அனைவரும் சம்மணம் இட்டு அமர்ந்து உணவைச் _________________.

வாழை இலையில் உணவு பரிமாறுவது தமிழ் பண்பாடாகும். உண்ணும்போது இலையின் _______________ நம் இடப்பக்கமும் அகன்ற பகுதி வலப்பக்கமும் இருக்க வேண்டும்.

நாம் ______________________ உணவு உண்பதால் இம்முறையைப் பின்பற்றுகிறோம். இலையில் உள்ள மூலிகைச் சத்து நம் உடலுக்கு __________________ தருகின்றது; பல நோய்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கின்றது.

| | | |
|---|---|---|
| வாழை | சுவைத்தனர். | |
| கார்த்திகைத் | வீட்டிற்கு | விளக்குகளை |
| ஆரோக்கியத்தைத் | வலதுகையால் | நுனிப்பகுதி |